22 2010

## சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி – இந்திய அரசின் மெகா சுற்றுலாத் திட்டத்தின் கீழ் இராமேஸ்வரம் நகராட்சியை மேம்படுத்த, அந்நகராட்சிக்கு சில தொழில்நுட்ப பணியிடங்களை தோற்றுவித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நடை3) துறை

அரசாணை (ப) எண். 540 | நாள்: 20.10.2010

படிக்கப்பட்டது:-

1. அரசாணை(நிலை) எண்.142, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, நாள் 12.7.2010.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.38584/10/எப்3, நாள் 21.9.2010.

*****

**ஆணை:-**

நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், இந்திய அரசின் சுற்றுலாத்துறை அமைச்சகம், இராமேஸ்வரம் நகராட்சியை மேம்படுத்த, மெகா சுற்றுலாத் திட்டத்தின் கீழ் ரூ.1000.75 லட்சம் அனுமதியளித்துள்ளது என்றும், அதில் முதல் தவணையாக ரூ.607.99 லட்சம், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் விடுவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், இராமேஸ்வர நகராட்சியில் குடிநீர் விநியோகம் மற்றும் இதர பணிகளை கவனிக்க ஒரு பொது பணி மேற்பார்வையாளர் பணியிடம் மட்டும் உள்ளது என்றும் எனவே மெகா சுற்றுலா திட்டத்தின் கீழ், இராமேஸ்வரம் நகராட்சியை மேம்படுத்துவதற்கு சில தொழில்நுட்ப பணியிடங்களை ஒரு வருடத்திற்கு தோற்றுவிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் தெரிவிக்கையில், இப்பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டால், ஒருவருடத்திற்கு, அவர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதிய பங்களிப்பு போன்றவை பொருட்டு ரூ.7.17 லட்சம் செலவாகும் என்றும், இதற்காக, சில்லரை மேற்பார்வை செலவினமாக 2.5% வரை திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இத்திட்டத்தினை செயல்படுத்த தேவைப்படும் மேற்படி பணியிடங்களை தோற்றுவிக்க ஒரு வருட காலத்திற்கு அனுமதி அளிப்பின், அப்பணியிடங்களை, பணியிட மாறுதல் மூலம் நிரப்பலாமென்று தெரிவித்துள்ளார்.

2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பு கவனமாக ஆய்வு செய்யப்பட்டது. ஆய்விற்குப் பின், இந்திய அரசின், மெகா சுற்றுலா திட்டத்தின் கீழ், இராமேஸ்வரம் நகராட்சியை மேம்படுத்த, கீழ்க்காணும் தொழில்நுட்ப பணியிடங்களை, ஒருவருட காலத்திற்கு அல்லது பணிகள் முடியும் நாள் இதில் எது முந்தியதோ அதுவரை தோற்றுவிக்கலாமென்றும், மேற்படி பணியிடங்களை, நகராட்சிகளில் பணியாற்றும்

பணியாளர்களைக் கொண்டு பணியிட மாறுதல் மூலம் நிரப்பலாமென்றும் கருதி அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

| வ. எண் | பணியிடம் | தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் | அடிப்படை ஊதியம் |
|---|---|---|---|
| 1. | உதவி பொறியாளர் | 1 | 9300–34800–GP4600 |
| 2. | பணி மேற்பார்வையாளர் | 1 | 5200–20200–GP2800 |
| 3. | பணி ஆய்வாளர் | 2 | 4800–10000–GP1650 |

5. இவ்வரசாணை, நிதித்துறையின், அ.சா.எண்.2472/FS/P/2010, நாள் 01.10.2010ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–600 005.
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம்.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை, குறாகம், சென்னை – 600 108.

நகல் :-

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9.
முதன்மைச் செயலர் அவர்களின் தனிச்செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.2) துறை, சென்னை – 600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

RDMA, Madurai

E.O., Rameswaram